# LAABH SAMACHAR


Volume: 08 | Issue : 07 | October 2019 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE





Individual Villas at **Madurai** for
*24 Lakhs**

* DTCP Approved 140 Villas Layout
* Located at Airport -Thirumangalam Ring Road
* 24 Hours Security
* Suitable for Retirement Homes
* Solar Powered Villas
* Drinking Water Connection
* 40' and 30' Roads
* 3 Times Food Served at Home^
* Temple at Site

Registration and Service Connection Charges Extra

Call 90808 38798

Energy Livingscapes
Value . Fortune . Pride

HEAD OFFICE :
Plot No 264, LIG Colony,
Off Lake View Road , KK Nagar ,
Madurai - 625 020
Contact : 81108 11180
Email: info@energyls.in


SCC Program on

## Vetripadigal



**Chief Guest:**
**Mr. B.V. Ramesh Babu**
*M/s. Karpagam Motors, Mdu.*



**Guest of Honor:**
**Mr. B. Anand**
*M/s. Blaack Forest, Mdu.*

- மதுரை ரன் 2019 மாரத்தான்
- சிட்கான் 2019 மாநாடு – தொழில் வர்த்தக கருத்தரங்கு
- நம் சமூகத்தின் பெருமை ஸ்ரீ. K.R.M. கிஷோர் குமார் I.P.S.
- புவிசார் குறியீடு
- புதிய தொழில் வாய்ப்பு




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்
வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536




அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


TEXMO
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps
AQUA GROUP
Authorised Dealer:
Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.
AQUATEX
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems
Borewell Submersibles
Single Phase Jet Pumps
Pressure Boosting Systems
Electric Motors
Single Phase Domestic Pumps
Agricultural Monoblocks
Open-well Submersibles


J.M. Karthic Kumar
Cell: 99428 23335
99769 37016
LASER CARE
Printer Service
Toner Refill
TONER REFILL
1, Panthadi 1st street, 2nd floor,
(Near Thirumalai Naicker Mahal), Madurai-625 001.
E-mail: printerkarthic@gmail.com
Canon


AQUA DIAMOND RO
Sales & Service
All Company RO Water Purifier Service and exchange available
Thirukonda M. Vishnukumar
9524273727, 9524273728
Office @ Vandiyur, Madurai
email: vishnuaqua2737@gmail.com

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| A.T. Baskar | Member | 94429 37409 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

அன்கிதெ ச்கோ மொன்னு மொறெ

## நமஸ்கார்...

சேம்பர் அங்கத்தினர்கள் தங்கள் தொழில் மேன்மை பெற்று, வாழ்வில் வசந்தம் வீச எல்லாம் வல்ல இறைவனை வேண்டி தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசின் ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டம் கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்றது. இதில் பல்வேறு பொருட்களுக்கு வரி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. நமது சேம்பரில் இன்ஜினியரிங், நகை தொழில், பை தயாரிப்பு (பேக்கேஜிங்) துறை சார்ந்த நம் சேம்பர் அங்கத்தினர்கள் பலர் உள்ளனர். அவர்களுக்கு பயனுள்ள வகையில் இருக்கும்.

ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தின் மதுரை இணை அலுவலகம் Jt. DGFT தற்போது கோயம்புத்தூர் அலுவலகத்துடன் இணைக்கப்பட உள்ளதாக மத்திய அரசு தகவல் வெளிட்டிருந்தது. (முன்னதாக மதுரை Jt. DGFT அலுவலகத்தை சென்னையுடன் இணைக்க இருந்தது) அப்படி இணைத்தால் தமிழகத்தின் தென் மாவட்டங்களிலிருந்து ஏற்றுமதி செய்யும் வணிகர்கள் பல்வேறு வணிகப்பணிகளுக்காக ஒவ்வொரு முறையும் கோவை வரை பயணிக்க வேண்டிய சூழல் ஏற்படும், செலவுகள் / நேரம் அதிகமாகும், வணிகம் பாதிக்கும் என்பதை கருத்தில் கொண்டு சேம்பர் சார்பாக மத்திய தொழில் துறை அமைச்சர் திரு. பியூஸ் கோயல் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதோடு, பா.ஜ.க வின் தேசியச் செயலாளர் திரு. H. ராஜா அவர்களை சேம்பர் சார்பாக நேரில் சந்தித்து கடிதம் அளிக்கப்பட்டது. விரைவில நல்ல தகவலை பெறுவோம் என்று நம்புகிறோம்.

நம் வணிகப்பெருமக்களின் நலனுக்காக, நமது சேம்பர் மத்திய / மாநில அரசுகளிடம் நல்கி தீர்வு காண தயாராக உள்ளது. தங்கள் கோரிக்கைகளை சேம்பருக்கு அனுப்பவும்.

நன்றி. – குமரன் B ஜகுவா

## திருக்குறள்

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது

சௌராஷ்ட்ர மொழியில்: மடணக கொன்னிகரும் கர்ணககே2ள் சுட்டுக4லன்
லெக்குதெ2க்கெ ப2ல்ச ஜதகன்

**பொருள்:** (வலிமையறிதல், காலமறிதல் என்பதைப் போலவே தக்க இடத்தையும் கருத வேண்டும்) தகுந்த இடத்தை அறிந்துகொள்ளாமல் எந்தக் காரியத்தையும் தொடங்கிவிடக்கூடாது. இந்த விஷயத்தை எவரும் அலட்சியம் செய்து விட வேண்டாம்.

அதிகாரம் 50 — இடன் அறிதல் (காரியம் செய்யத்தக்க இடத்தை அறிதல்) — அரசியல்

## பொதுச்செயலாளர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

**27.08.2019** – சிறு குறு வர்த்தகர்களுக்கு 2017-18 & 18-19 ஜி.எஸ்.டி.ஆர் 9 & 9C தாக்கல் செய்வதிலிருந்து விலக்களிக்க மத்திய நிதி அமைச்சர் மற்றும் ஜி.எஸ்.டி கவுன்சிலுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

**01.10.2019** – ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தின் மதுரை இணை அலுவலகம் Jt. DGFT-ஐ கோயம்புத்தூர் அலுவலகத்துடன் இணைப்பதை தடுத்து, மதுரையிலேயே தொடர்ந்து செயல்பட, தொழில் துறை அமைச்சர் **பியூஷ் கோயல்** அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதோடு, பா.ஜ.க. தேசியச் செயலாளர் திரு. H. **ராஜா** அவர்களை சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து மனு அளித்தனர்.

**01.10.2019** – நம் சமூகத்தின் முன்னணி தொழில் முனைவோர்களான கற்பகம் மோட்டார்ஸ் திரு. B.V. **ரமேஷ்** பாபு மற்றும் Blaack Forest திரு. B. **ஆனந்த்** அவர்களை அழைத்து வெற்றிப்படிகள் என்ற தலைப்பில் தொழில் சார்ந்த கூட்டம் நடத்தப்பட்டது. இதில் சேம்பர் அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டனர். சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார்.

**06.10.2019** – மதுரை மஞ்சணக்காரத்தெருவில் அமுத் சுரபி வங்கியின் கிளை திறப்பு விழா நடைபெற்றது. இதில் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B.**ஜகுவா** அவர்கள் வங்கியின் ATM மையத்தைத் திறந்து வைத்தார்.

**06.10.2019** – ஸௌராஷ்ட்ர முன்னேற்றக் கழகத்தின் 10ம் ஆண்டு விழாவில் சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**08.10.2019** – சேம்பர் ஆலோசகர் திரு. K.K. **சுரேந்திரநாத்** அவர்களின் அஸீதியப்தபூர்த்தி நடைபெற்றது. இதில் சேம்பர் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு ஆசி பெற்றனர்.

அகம் மகிழ்ந்து அன்பு பொங்க
முகம் மலர்ந்து தினமும் தங்க – என்
மனமார்ந்த **இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்** – K.K. திநேஷ்

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

இறையருள் பெருகி, தொழில் வளம் பெற்று, வாழ்கை இனிமையாக அமைந்திட தீப ஒளி திருநாளாம் தீபாவளி நல்வாழ்த்துக்களை சேம்பர் அங்கத்தினர்களுக்கு இதழின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த செப்டம்பர் மாத இதழில் சிட்கான் 2019 மாநாட்டின் முதல் இரண்டு நாள் நிகழ்ச்சிகள் வெளியாயின. இந்த இதழில் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் மற்றும் மதுரை ரன் 2019 மாரத்தான் பற்றி புகைப்படங்களுடன் காணலாம்.

லாப் ஸமாச்சார் இதழ், நமது சேம்பர் அங்கத்தினர்களுக்கு மட்டுமல்லாது, சமூக முக்கிய பிரமுகர்களுக்கும், நமது சமூக அமைப்புகளுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இதில் விளம்பரங்கள் விரும்புவோர் நமது சேம்பர் அலுகத்தை தொடர்பு கொள்ளவும்.



இந்த மாத இதழில் தொழில் சார்ந்த தகவல்களுடன், அரசின் உயர் பதவியில் வகிக்கும் நம் சமூகத்தவரின் நேர்காணல், நமது சமூகத்தில் நடைபெற்ற சில முக்கிய நிகழ்வுகள் போன்றவையும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

நன்றி

B.S. ஜனார்த்தனன்

**Bulletin Supporters:**

Dr. **A.R. Ganesan** - Proof Reading

Mr. **J.R. Gopinath** - Tamil & English Motivational Quotations

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

**Kindly Save our Whatsapp No:**
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**




ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் **சிட்கான் 2019**

# உடல் உறுப்பு தானம் விழிப்புணர்வு - மதுரை ரன் 2019-மாரத்தான் போட்டி







ஒரு மாபெரும் சமூக நோக்கத்துடன் உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதற்காக **மதுரை ரன் 2019** என்ற பெயரில் மாரத்தான் போட்டி ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், சிட்கான் 2019 மாநாட்டுடன் இணைத்து நடத்தியது. இந்த விழிப்புணர்வு போட்டி 04.08.2019 அன்று காலை 6 மணி அளவில் மதுரை காந்தி மியூசித்தில் நடைபெற்றது. ஆண் பெண் இருபாலரும் கலந்து கொண்டனர். 10 கி.மீ., 5 கி.மீ., மற்றும் 3 கி.மீ., என்ற மூன்று நிலைகளில் மாரத்தான் போட்டி நடைபெற்றது. இந்த மாரத்தான் போட்டிக்கு சிறப்பு விருந்தினர்களாக மதுரை மாநகர ஆட்சியர் திரு. **விசாகன்** மற்றும் மதுரை மாநகர காவல் துறை ஆணையர் திரு. K. **சுகுமாரன்** ஆகியோர் கலந்து கொண்டனர். **மதுரை ரன் 2019 – மாரத்தான்** போட்டியின் சில புகைப்படங்கள்.








மதுரை காந்தி மியூசியத்தில் 04.08.2019 (ஞாயிறு) அன்று காலை 4.30 மணி முதலே மதுரை ரன் 2019 ல் முன்பதிவு பெற்ற 800க்கும் மேற்பட்ட பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களும், 400க்கும் மேற்பட்ட சேம்பர் உறுப்பினர்களும் பங்குபெற்றனர். 8 கவுண்டர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பதிவு செய்த அனைவரும் தங்கள் பெயர் விபரங்கள் சரிபார்த்துக்கொண்டனர். அவர்களுக்கு **மதுரை ரன்** குழுவினர் பிப் எனப்படும் வரிசை எண், டி-சர்ட், குளுக்கோஸ், பிஸ்கட், தண்ணீர் பாட்டில் ஆகியவைகளை அழகான பேக்-ல் வைத்து அளித்தனர். போட்டிக்கு முன்னதாக **ஜீம்பா** எனும் உற்சாக நடனம் நடைபெற்றது. பங்கு கொண்ட அனைவரும் ஆரவாரத்துடனும், உற்சாகத்துடனும் ஆடினர்.






மதுரை ரன் 2019 - மாரத்தான் போட்டியை கொடியசைத்து துவக்கி வைக்க மதுரை மாநகர ஆட்சியர் திரு. **விசாகன்** அவர்களும், மதுரை மாநகர காவல்துறை இணை ஆணையர் திரு. K. **சுகுமாரன்** அவர்களும் கலந்து கொண்டனர். அவர்களை சேம்பர் நிர்வாகிகள் பூங்கொத்து அளித்து வரவேற்றனர். போட்டி துவங்குவற்கு முன்னதாக, ஆட்சியர் திரு. **விசாகன்** மற்றும் காவல்துறை இணை ஆணையர் திரு. K. **சுகுமாரன்** அவர்கள் சிறப்புரையாற்றினர். அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து சேம்பர் கௌரவித்தது.


வாழ்வில் வளம் பெற!
வர்த்தகத்தில் வெற்றி பெற!!
SCT
24X7 TV CHANNEL IN MADURAI
SOURASHTRA CABLE TV
Sourashtra Cable TV SCT
Get in on Google Play Store
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
94430 34909
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD
179 177 41 64 SDS 77

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் **சிட்கான் 2019**

# உடல் உறுப்பு தானம் விழிப்புணர்வு - மதுரை ரன் 2019-மாரத்தான் போட்டி




மதுரை மாநகர ஆட்சியர் திரு. **விசாகன்**, காவல் துறை இணை ஆணையர் திரு. K. **சுகுமாரன்** மற்றும் சிட்கான் 2019 சேர்மன் திரு. **குமரன்** B. **ஜகுவா** ஆகியோர் காலை சரியாக 6 மணிக்கு 3 கி.மீ., 5 கி.மீ., மற்றும் 10 கி.மீ., க்கு பேங்கேற்ற போட்டியாளர்களை கொடியசைத்து துவக்கி வைத்தனர்.




போட்டியில் பங்கேற்றவர்கள் வழி தவறாமல் செல்வதற்காக ஆங்காங்கு வழிகாட்டி பலகை மற்றும் Volunteer-கள் நிறுத்தப்பட்டிருந்தனர். அதோடு, போட்டியாளர்கள் சோர்வடையாமல் ஓடுவதற்கு குளுக்கோஸ், எலுமிச்சை பழம் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் ஆகியவை வழங்கப்பட்டது. அவர்கள் ஓடும் பாதைகளில், பாதுகாப்பிற்கு காவல் துறையினர்கள், முதலுதவி சிகிச்சை அளித்திட ஆம்புலன்ஸ் ஏற்பாடுகள் ஆகியன செய்யப்பட்டிருந்தன.




10கி.மீ., 5 கி.மீ., மற்றும் 3 கி.மீ.,-ல் பேங்கேற்றவர்களில் முதல் மூன்று நபர்களை போட்டியின் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டனர். அவர்களை மதுரை ரன் குழுவினர் மேடையில் மெடல் அளித்து கௌரவித்தனர். இதில், 10 கி.மீ., போட்டியாளருக்கு மட்டும் ரூ. 10,000,/-, ரூ. 5000/- மற்றும் ரூ. 3000/- என முதல் மூன்று ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டது. கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இந்த மாபெரும் மாரத்தான் போட்டிக்கு Volunteer-ஆக இருந்து பணியாற்றிய **ஸௌராஷ்ட்ர கல்லூரி** மாணவர்களுக்கும், அவர்களை அனுமதித்த கல்லூரி நிர்வாகத்திற்கும், ஆம்புலன்ஸ் மற்றும் மருத்துவ முதலுதவி செய்ய முன்வந்த மதுரை **செஞ்சிலுவை அமைப்பிற்கும்** சேம்பர் நெஞ்சார்ந்த **நன்றி**யினைத்தெரிவித்துக்கொள்கிறது. அதோடு, இப்போட்டி நடத்த அனுமதியளித்த மதுரை **போக்குவரத்து காவல்துறையின் அதிகாரிகளுக்கும்,** அண்ணாநகர் & தல்லாகுளம் **போக்குவரத்து காவல்துறையின்** சேவைக்கும் **நன்றி** தெரிவித்துக்கொள்கிறது.


உன்னத தரம் ! உயர்வான ருசி !!



Available in :
15kg Tin, 1 Ltr,
1/2 Ltr, 200ml,
100ml, 50ml

சாரதி®

நல்லெண்ணெய்



Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL

2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்

# சிட்கான் 2019

## மாநாட்டின் தொழில் வர்த்தக மாநாட்டு விழா – கலை நிகழ்ச்சிகள்

மூன்று நாட்கள் தொழில் வர்த்தக கண்காட்சியுடன் நடைபெற்ற சிட்கான் 2019 தொழில் வர்த்தக மாநாட்டின் மூன்றாம் நாளான 04.08.2019 அன்று காலை 9.45 மணி அளவில் கணபதி பூஜையுடன் ராஜா முத்தையா மன்றத்தில் துவங்கியது. மாநாட்டில் சிறப்புப் பேச்சாளர்களின் கருத்தரங்குகள் மட்டுமல்லாது கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அவைகளை புகைப்படத்துடன் அங்கத்தினர்கள் கண்களுக்கு விருந்தளிக்கிறோம்.



ஸ்ரீமந் நடன கோபால நாயகி கலைக்குழுவினரின் லவகுசா நாட்டியம்



செல்வி. N.R. **கவிஷா ஸ்ரீ**-ன் பரதநாட்டிய நிகழ்ச்சி



திருமதி. **ப்ரீத்தா விக்னேஷ்** & திருமதி. **வைஷ்ணவி அஸ்வின் குமார்** குழுவினரின் **பொம்மலாட்டம்** நிகழ்ச்சி



திருமதி. **ரேஷ்மி**, திருமதி. **அஜிதா** மற்றும் செல்வி. S.S. **தீப்தி** அவர்களின் **ராதாகிருஷ்ணா நடன நிகழ்ச்சி**



பேராசிரியர். K.S. **அஸ்வத் பாபு** Head-MBA Dept. Sourashtra College, Mdu. அவர்களின் **அனைத்து கல்லூரி மாணவர்களின் திறன் போட்டிகள்.**



**சௌபாக்கியாஸ்** திரு. T.L. **சபரியாபு** மற்றும் **மானஸா ஹேர் & ப்யூட்டி சலூன்** திருமதி. **சக்தி** அவர்களின் **பாரம்பரிய ஆடை, அணிகலன் அணிவகுப்பு.**



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder • Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்

# சிட்கான் 2019

## தொழில் வர்த்தக மாநாடு கருத்தரங்கு

சிட்கான் 2019 - சௌராஷ்ட்ர தொழில் வர்த்தக மாநாட்டில் காலை 10.30 மணி அளவில் சொல்வேந்தர். **சுகி சிவம்** அவர்கள் **ஆனந்தமாய் வாழ்வோம்** என்ற தலைப்பிலும், 12.30 மணி அளவில், சௌராஷ்ட்ர மத்திய சபைத் தலைவர் டாக்டர். **ஸ்ரீராம் சேகர்** அவர்கள் **கொஞ்சம் வணிகம் கொஞ்சம் சமூகம்** என்ற தலைப்பிலும் பேசினர். அவர்களின் உரையை சுருக்கமாக காண்போம்.




**ஆனந்தமாய் வாழ்வோம்** என்ற தலைப்பிற்கு சொல்வேந்தர் **சுகி. சிவம்** அவர்கள் ஆற்றிய உரையை காண்போம்.

- வாழ்க்கையில் நாம் கிடைத்ததை என்றுமே பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. கிடைக்காததை பெரிதாக கருதி காலத்தை வீணாக்குவதை விட கிடைத்ததை பெரிதாக கருதி கொண்டாடினால், வாழ்க்கை நிச்சயமாக அழகாகவும் மகிழ்ச்சியுடனும் இருக்கும் என்று கூறினார்.
- ஒவ்வொருவரும் தாம் நினைத்தபடி வாழ்க்கை அமைய வேண்டும் அதுவே சந்தோஷம் என்று கருதுகிறார்கள். உண்மையில் அப்படி என்றுமே அமைந்துவிடுவதில்லை. இதனை உணர்ந்து எது நடந்தாலும் ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவம் உடையவர்களே வாழ்க்கையில் மகிழ்ச்சியானவர்கள் என்று கூறி இதற்கு தமக்கு ஏற்பட்ட ஒரு நெருக்கடியான சூழலையும் உதாரணமாக கூறினார்.

சௌராஷ்ட்ர சேம்பர் **சுகி சிவம்** அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவித்தது.






**கொஞ்சம் வணிகம்; கொஞ்சம் சமூகம்** என்ற தலைப்பிற்கு Dr. **ஸ்ரீராம் சேகர்** அவர்கள் ஆற்றிய உரையை காண்போம்.

- அவர் தனது உரையில்;

  **அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி ஆங்கு.**

  என்ற திருக்குறளை மையப்படுத்தி பேசினார்.
- வணிகத்தின் மூலம் பொருளை (பணம்) சம்பாதிப்பது எவ்வளவு முக்கியமோ, அதே போன்று, சமூக அக்கறையுடன் செயல்பட்டால் கடவுளின் அருளையும் பெற முடியும்.
- எவ்வளவு தான் பணம் சம்பாதித்துக்கொண்டே இருந்தாலும் ஒரு நிலையில் பணத்திற்கு மட்டுமே முக்கியத்துவத்தை அளிப்பதை தவிர்த்து சுற்றுச்சூழல், சமூகம் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு அதற்காகவும் செயல்பட வேண்டும் என்று அருமையாக பேசினார்.

சௌராஷ்ட்ர சேம்பர் Dr. **ஸ்ரீராம் சேகர்** அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவித்தது.







நண்பன் எதிரியானால் நிம்மதி இருக்காது;
எதிரி நண்பனானால் நம்பிக்கை இருக்காது

சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்

# சிட்கான் 2019

## தொழில் வர்த்தக மாநாடு கருத்தரங்கு

சிட்கான் 2019 – மாநாட்டில் பங்கேற்ற மற்றும் இரண்டு சிறப்புப் பேச்சாளர்களான தியாகராஜர் கல்லூரியின் முனைவர் பட்ட ஆய்வாளர் திருமதி. **ம.கா. துர்கா தேவி** அவர்களின் **எட்டுத்திக்கும் பெண்கள்** என்ற தலைப்பிலும், ஜே.சி.ஐ. இந்தியா மண்டலத்தலைவர் திரு. **எம்.கே. கார்த்திகேயன்** அவர்களின் **சிகரத்தை தொடுவோம்** என்ற தலைப்பிலும் பேசினர். அவர்களின் உரையினை சுருக்கமாக காண்போம்.




திருமதி. ம.கா. துர்கா தேவி
முனைவர் பட்ட ஆய்வாளர்




திரு. M.K. கார்த்திகேயன்
மண்டலத்தலைவர், ஜே.சி.ஐ. இந்தியா

**எட்டுத்திக்கும் பெண்கள்** என்ற தலைப்பிற்கு திருமதி. **ம.கா. துர்கா தேவி** அவர்கள் ஆற்றிய உரையை காண்போம்.

- பல்வேறு துறைகளில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் இன்று சாதித்து வந்தாலும், தொழில் துறையில் மட்டும் குறைந்து காணப்படுகின்றனர். பெண்கள் தொழில் துறையில் ஈடுபட தடைகள் என்று எதுவும் இல்லை. அவர்களுக்கு வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றன. அதற்கு பெண்களிடத்தில் ஈடுபாடு தேவை என்றார்.
- இன்று நெசவுத்தொழில் எந்தெந்தத் துறையில் வளர்ந்துள்ளது என்பதைப் பார்த்து அது சார்ந்த துறைகளில் நாம் ஈடுபடலாம். இன்று நெசவுத் தொழில் Fashion Designing, Fashion Technology, Embroidery, Aari போன்ற வகையான ஆடை வடிவமைப்புக் கலையாக மாறியுள்ளது. அந்தத் துறைகளில் ஈடுபட்டால் நாம் நிச்சயமாக நாம் வெற்றிபெற முடியும். வள்ளுவர் கூறுகிறார்



**எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வ துறைவ தறிவு.**

அதாவது, இந்த உலகம் எந்தத்திசையை நோக்கி பயணிக்கிறதோ, அந்தத்திசையை நோக்கி பயணப்படுவது தான் அறிவு. எனவே, மரபார்ந்த ஆடை வடிவமைக்கும் நம் அறிவையும், நவீன முறையில் கணினியில் ஆடை வடிவமைத்தல் போன்ற பல்வேறு கலைகளையும் கற்று, மரபில் புதுமை புகுத்தி தொழிலிலும் புதுமை செய்தால் நிச்சயமாக நாம் வெற்றி பெற முடியும் என்று அருமையாக பேசினார். நம் சமூகத்தினருக்கு உத்வேகத்தை அளிக்கும் பேச்சாக அமைந்தது.

**சிகரத்தை தொடுவோம்** என்ற தலைப்பிற்கு திரு. **எம்.கே. கார்த்திகேயன்** அவர்கள் ஆற்றிய உரையை காண்போம்.

- முதல் படியாக, ஒருவர் சிகரத்தை அடைய அவர் தன் மீது முழுமையாக நம்பிக்கை வைக்க வேண்டும்.
- இன்று காலம் ஓடும் வேகத்திற்கு நாம் விரும்புவதை உடனடியாக அடைய வேண்டும் என்று நினைக்கிறோம். எந்த ஒரு இலக்கையும் அடைய பொறுமையை வளர்த்துக்கொள்வது இரண்டாம் படி.
- மூன்றாவதாக, நம் இலக்கை அடைய தொடர் தோல்விகள், தடைகள் ஏற்பட்டாலும் தளராது தொடர்ந்து வைராக்கியத்துடன் துணிந்து செயல்படும் ஆற்றலை வளர்த்தக்கொள்ள வேண்டும்.
- எந்த ஒரு சூழலிலும் தெளிவுடன் நம் நோக்கத்தை அடைய முயற்சித்துக்கொண்டே இருக்க வேண்டும். நிச்சயம் ஒரு நாள் நம் சிகரத்தை அடைவோம் என்று பல உதாரணங்களுடன் அருமையாக பேசினார்.

திரு. **எம்.கே. கார்த்திகேயன்** அவர்களுக்கு சேம்பர் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தது.




பதிவு எண்: 16 / 2002

☎ 0452-2679676

மகாத்மா முதியோர் இல்லம்

Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்

7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.

website : www.mahathmaoldagehome.com E-mail : mmilmalarkulu@gmail.com

நிறுவனர்கள்

| M.S. சந்திரசேகர் | J.R. ரமேஷ் | B.J. மகேசுவர்லால் | T.R. குமரன் | M.R. பிரேம்குமார் |
|---|---|---|---|---|
| 98421-44555 | 97861-40570 | 93444-51607 | 94437-23337 | 93444-51605 |


வார்த்தைகளை சிதறவிடாதே பிறகு நீ வள்ளுவரானாலும் யாரும் உன்னை கவனிக்க மாட்டார்கள்

BVK AWARDS

# ஸௌராஷ்ட்ர சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா






கல்வி, கலை, விளையாட்டு, சமூக சேவை போன்ற பத்து துறைகளில் கடந்த ஆண்டில் சாதனைபடைத்த நம் சமூக மக்களை தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஆண்டும் **BVK** விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 04.08.2019 அன்று மாலை 5 மணிக்கு ராஜா முத்தையா மன்றத்தில் **BVK** விருது வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு **BVK Group of Companie**s சேர்மன் திரு. **பாலா வெங்கட் குட்டி** அவர்கள் தலைமை தாங்கினார். இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக தந்தி தொலைக்காட்சி முன்னாள் செய்தித் தொடர்பாளர் திரு. **ரங்கராஜ் பாண்டே** அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் அங்கத்தினர்கள் பங்கேற்றனர். திரு. **ரங்கராஜ் பாண்டே** அவர்கள், சிறிய வயது முதலே மொழி, சமூக உணர்வு, கலாச்சாரம், நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக்கொடுத்து வந்தால் அந்த சமூகம் எந்த சூழலிலும் அழிய வாய்ப்பில்லை என்று அருமையாக பேசினார். பிறகு, ஸௌராஷ்ட்ர சாதனையாளர்கள் பத்து பேருக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.




Madurai RUN 2019

## மதுரை ரன் 2019 – மாரத்தான்

### களப்பணியாற்றிய குழு உறுப்பினர்களுக்கு பாராட்டுக்கள்

**மதுரை ரன் 2019 மாரத்தான்** போட்டி "Donate Organ - Save Life" என்ற குறிப்புடன் உடல் உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நடத்தப்பட்டது. இந்த மாபெரும் மாரத்தான் போட்டியை சிறப்பாக நடத்திக்கொடுத்த ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சிறப்பு அழைப்பாளர் திரு. T.M. **ருபேஷ்** பாபு, திரு. T.R. **சரவணன்**, செயற்குழு உறுப்பினர் Dr. A.R. **கணேசன்** மற்றும் **SOU.NEXT-GEN** குழுவினருக்கு சேம்பர் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

## நிதியுதவி மற்றும் பொருளுதவி செய்த நிறுவனத்தார்களுக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது

SITCON – Sourashtra Industrial Trade Conference – August 2,3 & 4 2019 | Velammal Hospital | Quality Knit Wears Private Limited | Apollo Hospitals | Sowbhagyaas Diamond • Gold • Silver சௌபாக்கியாஸ் | BVK Group

Visvas Promoters | SVS | Sarathi Gold Dhoties & Shirts | Courtyard by Marriott Madurai | Claymore IT Services Pvt Ltd | Colors Agency Services | 98.3 FM

இவர்களுடன், மேலும் **பொருளுதவி** செய்த **தீபம் கலர் லேப்** மற்றும் **Chemists & Druggists Association,**
**நிதியுதவி** அளித்த **மியாட் மருத்துவமனை** Dr. **முத்துவேல்ராஜன்** அவர்களுக்கும்
சேம்பர் நெஞ்சார்ந்த **நன்றி**யினை தெரிவித்துக்கொள்கிறது




GO Natural Healthy Food

PASS ON பாஸ் ஆன்

SURYAA சூரியா

இந்து உப்பு

கல் உப்பு Crystal Salt | தூள் உப்பு Powder Salt

100% Pure Original

NABL

Pink Himalayan (Hindu) Rock Salt

உங்கள் சிறுநீரகத்தின் பாதுகாப்பிற்கு மிகச்சிறந்தது.
பொதுவாக எல்லா சமையலுக்கும் மற்றும்
அனைவரும் உபயோகப்படுத்தலாம்.

fssai Reg. No.: 22417573000185

BENEFITS

- Best for Dialysis Patients
- Best for High Blood Pressure Control
- Help for Children's Bone Improve
- Increase mental Memory of Children
- Earthy Superior Taste
- Virgin Pure & Naturally Pink
- Ideal for Pregnant Woman

Repacked / Marketed by : PRIYA AGENCY Plot No. 24-B, Kurivikaran Salai, Anna Nagar, Madurai - 20
Cell : 94438 81901, 98429 22005

# சிட்கான் 2019 மாநாட்டின் குழு உறுப்பினர்கள்

**CHAIRMAN OF THE SITCON 2019 - KUMARAN B JAGHUVA**

### Past Presidents

| | |
|---|---|
| K.V. Bala | |
| C.K. Sekar | |
| E.R. Kumaresan | |
| K.K.G. Prabhakaran | |
| S.K.R. Ramesh | Imm. Pt. President |

### Office Bearers (2017-19)

| | |
|---|---|
| M.K. Kaladhar Babu | President |
| Kumaran B Jaghuva | Vice President & SITCON'19 Chairman |
| T.R. Mohanram | General Secretary |
| K.K. Dinesh | Treasurer |
| K.K. Kubendran | Jt. Secretary |
| T.K. Vijay Babu | Jt. Secretary |

### Food Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| S.G.Srinivasan | Chairman | 91500 99456 |
| K.S.Sivakumar | Member | 93441 51331 |
| M.R.Muralidharan | Member | 94885 53218 |
| E.S. Ramesh Babu | Member | 92442 31583 |
| T.S.S.Nandalal | Member | 99435 08192 |
| T.K. Saravanakumar | Member | 94435 72753 |

### Hall & Stage Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| G.R.Subramanian | Chairman | 94427 52044 |
| L.N.R.Damodaran | Member | 97894 51477 |
| B.V.Kuppuraj | Member | 98431 73403 |
| V.V.Suresh | Member | 98421 88421 |
| J.Suresh | Member | 94434 73057 |

### Hospitality Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| P.M.Muralidharan | Chairman | 94434 68476 |
| T.K. Sivanath Babu | Member | 94423 27081 |

### Registration Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| A.B.Kumaresh Babu | Chairman | 93443 04980 |
| K.V. Kumaresan | Member | 93452 92199 |
| J.R. Gopinath | Member | 98944 89762 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| L.B. Ashok Kumar | Member | 99421 60024 |

### Souvenir Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| J.S.Sayee Jeevan | Chairman | 95004 40811 |
| T.K. Sivanath Babu | Member | 94423 27081 |
| P.R.Kubendran | Member | 97875 71055 |
| N.S.Premkumar | Member | 99944 35350 |

### Programme Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| Dr. A.R.Ganesan | Chairman | 98421 75804 |
| T.M.Rubesh Babu | Member | 95000 35200 |
| E.R.K.Vignesh Babu | Member | 94422 31583 |
| T.R.Saravanan | Member | 92446 84702 |
| T.G.Surajlal | Member | 98436 20908 |

### Security Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| K.K.Karunakaran | Chairman | 98409 60844 |
| Allun Thulasi | Member | 95003 38866 |
| R.M. Krishnan | Member | 98657 21551 |

### Reception Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| S.K.B.Chandraprakash | Chairman | 98655 45048 |
| T.K. Sivanath Babu | Member | 94423 27081 |
| S.S. Ramsundar | Member | 93441 22181 |

### Honouring Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| T.N.Suriyaprakash | Chairman | 93441 52068 |
| K.V. Kumaresan | Co-Chairman | 98940 51735 |
| K.D. Dinakaran Bapu | Member | 98429 43372 |
| T.K. Sivakumar | Member | 93441 02180 |

### Stall Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| B.S.Janaarthanan | Chairman | 97905 75650 |
| S.M.Karthi Kumaran | Member | 94438 31496 |
| V.V.Ramlakshman | Member | 94439 30728 |
| A.T.Baskar | Member | 94429 37409 |
| K.R. Subash | Member | 98653 23244 |

### Kit Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| T.K.D.Mohan | Chairman | 98430 52530 |
| K.R. Rajendran | Member | 93441 00252 |

### Finance Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| K.K.Dinesh | Chairman | 98421 16461 |
| J.R.Gopinath | Member | 98944 89762 |

### Administration Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| K.K.Kubendran | Chairman | 98940 37794 |

### Publicity Committee

| Name | Designation | Phone No. |
|---|---|---|
| T.K.Vijay Babu | Chairman | 98942 10055 |
| B.S. Rajan | Member | 98421 82633 |

**SCC thanking and recognize all the above members for their contribution towards SITCON 2019**



தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...
ரிஜென்சி டிரேடிங் கம்பெனி
5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை–625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051

O.V.K. பாஸ்கரன்
அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்
V.K. ஜெயசங்கர்


ஒருவனை மனிதனாக ஆக்குபவை உதவிகளும், வசதிகளும் அல்ல
அவனுக்கு ஏற்படும் இடையூறுகளும் துன்பங்களும் ஆகும்

## SCC upcoming program

Topic:

# How to Balance **Health vs Business**



Speaker:

**Dr. B.R.J. KANNAN** M.D.D.M., Cardio



Senior Consultant &
Interventional Cardiologist,
Vadamalayan Hospital, Mdu.

**Date : 05.11.2019**
**Time : 06.30PM**
**Venue: SCC Hall A/c**

**Kumaran B Jaghuva**
President

**K K Dinesh**
Gl. Secretary

**T R Saravanan**
Program Co-ordinator

# ஸமூக செய்திகள்

## புதுப்பொலிவுடன் சௌராஷ்ட்ர மருத்துவமனை

சௌராஷ்ட்ர முன்னேற்றக் கழக டிரஸ்ட் சார்பில் மதுரை பந்தடி 5ல் நம் சமூக மக்களுக்கு இலவசமாக மருத்துவம் அளித்து வரும் சௌராஷ்ட்ர மருத்துவமனை 15.09.2019 அன்று மாலை புதுப்பொலிவுடன் துவக்கப்பட்டது. இந்த மருத்துவமனையை திரு. R. **கணேஷ்** Deputy Director, Press Relation, Parliament House, New Delhi. அவர்கள் துவக்கி வைத்தார். ஸௌராஷ்ட்ர முன்னேற்றக்கழக டிரஸ்ட் தலைவர் திரு. V.G. **ராமீதாஸ்** அவர்கள் தலைமை தாங்கினார். சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## ஸௌராஷ்ட்ர முன்னேற்ற கழகம் ஆண்டு விழா

சௌராஷ்ட்ர முன்னேற்ற கழகத்தின் 10ம் ஆண்டு விழா மற்றும் ஸௌராஷ்ட்ர மருத்துவமனையின் 6ம் ஆண்டு விழா 06.10.19 அன்று மாலை தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் ஹட்சன் அரங்கில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக ஆந்திர மாநில அரசின் உள்துறை முதன்மை தலைமைச் செயலர் திரு. K.R.M. **கிஷோர் குமார்**, சிறப்பு அழைப்பாளராக மதுரை சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. **சரவணன்** ஆகியோர் கலந்து கொண்டனர். ஸௌராஷ்ட்ர முன்னேற்றக்கழக டிரஸ்ட் தலைவர் திரு. V.G. **ராமீதாஸ்** அவர்கள் தலைமை தாங்கினார். சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## பள்கார் மருத்துவமனைக்கு பொருளுதவி

நமது சமூகத்தின் பள்கார் மருத்துவமனையில் புதிதாக பல் சிகிச்சைத்துறை துவக்கப்பட்டுள்ளது. பல் நோயாளிகள் அமரக்கூடிய ரூபாய் ஒன்றரை லட்சம் மதிப்பிலான இருக்கை ஒன்றை திரு. M.S. **விஜய்கணேஷ்**, திரு. N.M.S. **ஜெய்க்குமார்**, மற்றும் திரு. P.J. **பன்சிதர்** ஆகியோர் இணைந்து வழங்கியுள்ளனர். அவர்களின் கொடையுள்ளத்தை சேம்பர் பாராட்டுகிறது. இவர்களின் சமூக சேவை தொடர வாழ்த்துக்கள்.


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு
கைராசியான ஸ்தாபனம்
**SRB சில்க்ஸ்**
158, தெற்கு மாசி வீதி,
மதுரை – 1.
Ph : 2320536

100 ஆண்டுகள்
SRB சில்க்ஸ்
Since 1901

ஆடவர் மற்றும் பெண்களுக்கான
பிரத்யேக ஆடையகம்
**SRB பொட்டிக் BOUTIQUE**
158-A, தெற்கு மாசி வீதி, மதுரை–1.
போன் : 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர்,
மதுரை–20 போன் : 4961990


**எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.**




A2/1, K.K. Nagar Main Road, Near Thulasi Pharmacy, Madurai - 625001

**Cell: 99430 31237**


CRYSLER
SANITARYWARE
www.crysler.in
designer & world class sanitary
CRYSLER
CITRA
the wellness of water
VSB ENTERPRISES
320/4A, Vallanatha Puram,
Avaniyapuram By Pass Road, Madurai - 625 012.
E-mail : vsb.mdu@gmail.com
JFP. T.R.K.Baalajee Sai
88706 64984
PLASTIC PRODUCTS | SANITARY WARE | KITCHEN SINK | ALLIED BATH FITTINGS | BATH ACCESSORIES


BVK Foundation
Presents
6 ANNUAL
Sourashtrian Achievers
BVK Award 2019
August 04, 2019
Achievers
Outstanding Professional
Dr. M.E.Paramasivam
Best Social Worker
Mr. P.V.Sethuraman Iyengar
Achievers
Best Cultural Heritage Propagator
Best Artist
Mr. K.Eswaran
Best Sport Person
Mr. R.V.Gurulal
Privilege Award - Special Student
Dr. J.R.Jawahsrial
Best Business Innovator
Mr. E.R.Ashok kumar
Life Time Achievements Awards
Mrs. M.V.Janaranjani Bai
Privilege Awards
Mr. K.V.Pathy
Outstanding Sourashtrian Awards - Mumbai
Mr. Mohan V.N. Muthuswamy
Outstanding Sourashtrian Awards - Delhi
Mr. K.K.Shreedhara

*Feeling Good Is Second Nature*

Lissy®

- Bra
- Panty
- Slips

*All Women Love*

Feeling Second Nature

*Manufacturer:*

**VGP APPARELS**

Saikrupa Industrial Estate (Dinbandu)
Shop No: 10, Near Shivam Wafers, Opp. P.L. Lokhande Marg,
Chembur(W), Mumbai - 400 089
Ph: 022 - 2525234, Cell: 89760 10072

**ஜெய்கங்கா அப்பேரல்ஸ்**
279, கீழ மாசி வீதி
விளக்குத்தூண் அருகில்
மதுரை – 1
செல்: 94430 21910

**P.G. India**
50, தெற்கு மாசி வீதி
லலிதா ஜுவல்லரில் எதிரில்
மதுரை – 1
செல்: 84382 71065

**வெங்கடேஸ்வரா டெக்ஸ் & கிட்ஸ் வியர்**
32, மஹால் 5வது தெரு
மதுரை – 1
செல்: 99650 40168

# சமூகத்தின் பெருமை ஸ்ரீ K.R.M. கிஷோர் குமார் I.P.S.

## ஆந்திர மாநில அரசு உள் துறை முதன்மை செயலாளர்



நம் சமூகத்தின் IPS திரு. K.R.M. கிஷோர் குமார் அவர்களை சந்தித்து உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

இந்த கட்டுரை நம் சமூக மக்களை தட்டி எழுப்பும் என நம்புகிறேன். இவரது தாய் திருமதி. தமயந்தி அம்மாள், பள்ளி ஆசிரியை, தந்தை திரு. K.R. மாதவாச்சாரி. சென்னையில் மருத்துவத்துறையில் நிர்வாக அதிகாரியாக பணியாற்றியவர். இவரின் தாத்தா திரு. ராமலிங்காச்சாரி பந்தடி 5வது தெரு கிருஷ்ணன் கோவில் பட்டராக சேவை செய்தவர்.

திரு. K.R.M. கிஷோர் குமார் அவர்கள் ஊட்டி Hindustan Photo Company-யில் முதன் முதலாக பணியாற்றினார். அங்கு பணியிலிருந்து கொண்டே IPS தேர்வுகளை எழுதி வெற்றிபெற்றார். 1989 ஆண்டு IPS Batch-ல் தேர்வாகி ஆந்திராவில் கிழக்கு கோதாவரி மாவாட்டத்தின் போலீஸ் உதவி சூப்ரண்டட்டாக பதவி ஏற்றார்.

பிரகாசம் மாவட்டத்தின் போலீஸ் சூப்ரண்டட்டாக இருந்தார். திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புத்துறை பொறுப்பில் இவர் இருந்த சமயம் CCTV, Biometric, Scanning ஆகியவை நிறுவப்பட்டது. சமீபத்தில் அந்திர மாநில முதலமைச்சர் திரு. ஜெகன் மோகன் ரெட்டியிடம் சிறந்த சேவைக்கான இந்திய போலீஸ் பதக்கம் பெற்றிருக்கிறார்.

சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள மதுரை வள்ளுவர் காலனியில் அமைந்துள்ள திருப்பதி திருமலை தேவஸ்தான முன்பதிவு மையம் உயர்திரு. கோபாலகிருஷ்ணன் என்பவரால் தேவஸ்தானத்திற்கு தானமாக கொடுக்கப்பட்டது. அந்த சமயத்தில் இவருடைய உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் நடைமுறை சிக்கல்களை களைந்தார் என்பது நாம் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

தன் பணியில் இவர் காட்டும் திறமையும் நேர்மையும் தன் வளர்ச்சிக்கு அடிகோலியது. எந்த வித புகாருக்கும் இடம் கொடுக்காமல் பணியாற்றியதால் மாநிலத்தின் முதன்மை செயலாளர் பதவிக்கு வரமுடிந்தது என்று தெரிவிக்கிறார்.

நம் சமூக வணிகர்கள் மிகச்சிறந்த வணிகர்களாக உருவாக வேண்டும். அதற்கு தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். வெளி மாநிலங்களில் சென்று கூட வணிகம் செய்யலாம். நிறைய வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. நாம் தான் வாய்ப்புகளை வளங்களாக மாற்றிக்கொள்ள வேண்டும். நம் அடுத்த சந்ததிகளையும் வணிகத்தில் ஈடுபடுத்த வேண்டும்.

நம் குடும்பத்தில் குழந்தைகளையும் பள்ளி, கல்லூரியில் பயிலும் மாணவர்களயைும் ஊக்கம் கொடுக்க வேண்டும். அவர்களின் முயற்சிகளுக்கு தடைபோடாமல் நல்ல முறையில் வளர்க்க வேண்டும். உனக்கு ஒன்றும் தெரியாது அதிகப்பிரசங்கியாக கேள்விக் கேட்காதே என்று நம்மில் பெரும்பாலான பெற்றோர் கூறி வருகின்றனர். அவர்களின் வளர்ச்சியை தடுத்து விடுகின்றனர்.

மேலும் சௌராஷ்ட்ர பள்ளியில் படித்து பின்பு சௌராஷ்ட்ர கல்லூரியிலும் படிக்கும் போது நம் பிள்ளைகளுக்கு வெளி உலகத்தாரோடு பழகும் விதத்தையும் புரிந்து கொள்ளும் மனப்பாங்கும் அவ்வளவு சிறப்பாக அமையவில்லை என தெரிவிக்கிறார்.

நம் சமூக பள்ளிகள் மிகச்சிறந்த ஆசிரியர்களை பணியமர்த்த வேண்டும். அதிக ஊதியம் கொடுத்தேனும் அவர்களைப் பணியமர்த்த வேண்டும். மிகச்சிறந்த ஆசிரியர்கள்தான் மிகச்சிறந்த மாணவர்களை உருவாக்க முடியம். கல்வி கேள்விகளில் சிறப்பானதொரு இடத்தை நம் மாணவர்கள் பெற பெற்றோர் மிகுந்த அக்கறை காட்டினால் நம் சமூகம் வளமான இடத்தைப்பிடிக்கும் என்கிற இவரின் வார்த்தைகள் நம் சமூகத்தின் மீது இவருக்கு இருக்கும் அபிமானத்தைக் காட்டுகிறது.

நம் சமூக மாணவர்கள் நிறைய பேர் IPS மற்றும் IAS-களாக வரவேண்டும் என்பது இவரின் அவா. – *நேர்காணல்: J.S. சாயி ஜீவன்*




# சேம்பர்-ன் தொழில் கூட்டம் வெற்றிப்படிகள்

தற்போது நம் சமூகத்தில் முன்னணி தொழில்முனைவோராக இருப்பவர்களின் தொழில் முன்னேற்றப்பாதை, அவர்களின் வளர்ச்சிக்கு அவர்கள் எதிர்கொண்ட யுக்திகள் பற்றிய விபரங்களை நம் சமூகத்தின் வளர்ந்து வரும் தொழில் முனைவோர்களும் அறிந்து செயல்பட்டு வெற்றி காண வேண்டும் என்பதற்காக இந்த கூட்டம் கடந்த 01.10.2019 அன்று மாலை 6.30 மணிக்கு சேம்பர் வளாகத்தில் **வெற்றிப்படிகள்** என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு இரண்டு தொழில் முன்னோடிகள் பேச அழைக்கப்பட்டனர். இதில் சிறப்பு விருந்தினராக முன்னணி தொழில்முனைவர் திரு B.V. **ரமேஷ்** பாபு, M/s. கற்பகம் மோட்டார்ஸ், மதுரை அவர்களும், கௌரவ விருந்தினராக முன்னணி தொழில்முனைவர் திரு. B. **ஆனந்த்** M/s. Blaack Forest, மதுரை அவர்களும் கலந்துகொண்டனர். இந்த கூட்டத்தை சேம்பர் செயற்குழு உறுப்பினரும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான திரு. T.R. **சரவணன்** அவர்கள் ஏற்பாடு செய்தார். கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஐகுவா** அவர்கள் தலைமை தாங்கினார்.

முன்னணி தொழில்வோர்களின் அனுபவக் கருத்துக்களை நாம் தற்போது காண்போம்.



சிறப்பு விருந்தினர் திரு. B.V. **ரமேஷ்** பாபு அவர்கள் கூறியதாவது:

தாம் சிறுவயதிலேயே ஆட்டோ மொபைல் ஸ்டோர்ஸில் வேலைபார்க்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அதில் ஏற்பட்ட அனுபவத்துடன், தன்னுடன் பழகிய நண்பர்களின் உதவியினால் 5 வருடம் கஷ்டப்பட்டு வேலை பார்த்து சிறியதாக ரூ. 75000/- மட்டும் முதலீடுசெய்து 1985-ல் ஆட்டோ ஸ்டோர் தொழிலைத் தொடங்கியதாக தெரிவித்தார்.

☞ தொழில் சிறந்து விளங்குவதற்கு **கடின உழைப்பு** தேவை. சுமார் 16 மணி நேரம் ஒரு நாளைக்கு உழைக்கத்தயங்கக்கூடாது.

☞ மற்றொன்று **நேரம் தவறாமை**. எப்போது நேரம் தவறாது நாம் உழைக்கின்றோமோ நாம் அப்போது முன்னேற்றப் பாதையில் நுழைய ஆரம்பிக்கும் முதல் படிக்கல் என்றார்.

☞ நாம் எப்பொழுதும் **உயர்வாகவே சிந்திக்க வேண்டும்**. பெரியதாக உழைத்து, பெரியதாக தொழில் முன்னேற்றத்தை நினைத்து அதனை அடைய வேண்டும்.


